# வளர்க

# தமிழ்



குலோத்துங்கன்

# வளர்க தமிழ்

குலோத்துங்கன்

பாரதி பதிப்பகம்
தியாகராய நகர், சென்னை-17

# அணிந்துரை

அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்—என் அருமை நண்பர்—டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் பொறியியல் வல்லுநர் என்பது அனைவரும் அறிந்ததாகும். முன்னர், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்து பணியாற்றினார். இன்று பொறியியல் கலைக்கென அரசு தனியாக அமைத்துள்ள அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பிலிருந்து கொண்டு, அரும்பணியாற்றி வருகிறார்.

அன்பர் குழந்தைசாமி அவர்களை 35 ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் ஆரம்ப காலத்தில் எழுதிய கவிதை ஒன்றை எனது 'தமிழ் முரசு' (மாதமிருமுறை) இதழில் வெளியிட்டு மகிழ்ந்தேன். அப்பொழுதே, அவர் மிகச் சிறந்த கவிஞராக வருவார் என்ற எனது நம்பிக்கை பலித்து விட்டது என்பதை இந்தக் கவிதை நூல் காட்டுகின்றது.

'குலோத்துங்கன்' என்னும் புனைபெயராலேயே அவர் தம்முடைய கவிதைகளை வெளியிட்டு வந்தாராதலால், அக்கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பு நூலும் 'குலோத்துங்கன்' என்ற பெயரில், 'வளர்க தமிழ்' என்னும் தலைப்பைத் தாங்கி வெளிவருகிறது.

விஞ்ஞான வழிப்பட்ட பொறியியல் கலை நிபுணர் ஒருவர், தமிழிலே தலைசிறந்த கவிஞராக அறிமுகமாவது அரிதினும் அரிதாகும். தமிழ் மொழி மெய்ஞ்ஞானத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், விஞ்ஞானத்தையும் ஏவல் கொள்ளும் திறன் தமிழுக்கு இருக்கிறது என்பதை நம் குலோத்துங்கன் மூலந்தான் அறிகிறோம்.

Dr. வா. செ. குழந்தைசாமி திருச்சி மாவட்டத்தில் வாங்கலாம் பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர். இந்தியாவிலும், பின்னர் ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும், பயின்றவர்

நீர்வளத் துறைப் பேராசிரியர்; தமிழகத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்; மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர்; UNESCO ஆலோசகர் போன்ற பொறுப்புகளை வகித்தவர். இப்பொழுது அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர்

நீர்வளத் துறையில் பல ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ள இவரது கண்டுபிடிப்பு ஒன்று. Kulandaiswamy Model என்ற பெயரில் அத்துறை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. உலக அளவில் நீர்வளத்துறை அறிஞர்களால் மதிக்கப்படுபவர் UNESCO நிறுவனத்தின் நீர்வளத்துறைத் திட்டக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியவர் சர்வ தேசஅளவில் உயர்மட்டக்குழுக்களில் அங்கம் வகிப்பவர். தொழில் நுட்பக் கல்வித்துறையில் நீண்ட ஈடுபாடுடையவர். இவர் ஆர்வம்காட்டும்மற்றொரு துறை, தமிழ் வளர்ச்சியும், தமிழ் எழுத்துச் சீர்மைப்பும் ஆகும்.

'பொன்னி' இதழ் இவரை 1950-ல் 'பாரதிதாசன் பரம்பரை'யின் கீழ் அறிமுகப்படுத்தியது.
இலக்கியப் படைப்புக்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு 1980-ல் D. Litt. பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது.



இது ஒரு
பாரதி பதிப்பக
வெளியீடு